இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 140 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 15 – செவ்வாய்க்கிழமை 30 டிசம்பர் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 140: Thiruvalluvar Year - 2056 - Margazhi 15 - Tuesday 30 December 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## பல்லடத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ - தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்!

**பல்லடம், டிச. 30 -**

**பல்லடத்தில் நேற்று (29.12.2025) கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ - தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.**



1.31 கோடி மகளிருக்கு ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’, ‘விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்’, கல்வி கற்கும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண் திட்டம்’, வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான ‘தோழி விடுதி’, இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப. இராணி ஆகியோர் முன்னிலையில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, எம்.எல்.ஏ வரவேற்பில்;

நேற்று (29.12.2025 - திங்கட்கிழமை), மாலை 4.00 மணி அளவில், திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டினை அமைச்சர் பெருமக்களான சு.முத்துசாமி, மா.மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ் மற்றும் அரசுக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர்கள் / பொறுப்பாளர்களான மேயர் என்.தினேஷ்குமார், என்.நல்லசிவம், தோப்பு வெங்கடாசலம், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், துரை செந்தமிழ்ச்செல்வன், கே.எம்.ராஜு, கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி., கே.எஸ்.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஈஸ்வரசாமி, கே.இ.பிரகாஷ், கணபதி ப.இராஜ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், பெ.இராமலிங்கம்,



ஆர்.இளங்கோ, க.சிவகாம சுந்தரி, இரா.மாணிக்கம் ஆகியோர் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தனர்.

நிறைவாக, திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் திருப்பூர் க.செல்வராஜ், எம்.எல்.ஏ., நன்றியுரையாற்றினார்.

இதில் இலட்சக்கணக்கான மகளிர் பங்கேற்று சிறப்பித்தனர்.

---

### ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பாராட்டி பதிவு!

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்தில் இதுவரை 13 லட்சம் பேர் பயன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, டிச. 30 -**

**ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டம் சிறப்பாக செயல்படுவது குறித்து வெளியிட்டுள்ள பதிவை மேற்கோள்காட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இதுவரை இத்திட்டத்தில் 13 லட்சம் பேர் பயன் பெற்றனர் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உங்களைத் தேடி, உங்கள் பகுதிகளுக்கே வந்து உங்களின் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களின் மூலம் நேற்று வரை மட்டும் 13 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர்!**

**முழு உடல் பரிசோதனைகள், சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனைகள் போன்றவையால் தொடக்க நிலையிலேயே பல இலட்சம் மக்களின் பிரச்சினைகள் கண்டறியப்பட்டு, உரிய உயர்தரச் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டு அவர்களின் உயிர் காத்துள்ளோம்! முகாம்களிலேயே முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைத்து மக்களின் துயர் துடைத்துள்ளோம்.**

**நலம் பெற்றோரின் குடும்பத்தினர் கூறும் நன்றிகளோடு தொடர்கிறது நலம் காக்கும் ஸ்டாலின்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**'நலம் காக்கும் ஸ்டாலின்' மிகச் சிறப்பான திட்டம். ஏராளமான மக்கள் பயன் பெறுகிறார்கள் என்பதை நான் பார்த்து மகிழ்ந்தேன்.**

இவ்வாறு ப.சிதம்பரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### கோவை மாநகரின் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உள்ள

# உயர்மட்ட மேம்பாலத்திற்கு ‘சி. சுப்பிரமணியம் மேம்பாலம்’ என பெயர் சூட்டல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



**சென்னை, டிச. 30-**

**கோவை மாநகரின் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உள்ள உயர்மட்ட மேம்பாலத்திற்கு ‘சி.சுப்பிரமணியம் மேம்பாலம்’ என்று பெயர் சூட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கொள்கைகளும் பாதைகளும் வெவ்வேறானாலும் மக்களின் நன்மதிப்பைப் பெற்று நாட்டுக்காகப் பணியாற்றிய தலைவர்களைப் போற்றுவதே மாண்பு!

ஒன்றிய அமைச்சராகப் பொறுப்பு வகித்து, நாட்டு மக்களின் பசிப்பிணியைப் போக்கிய பசுமைப் புரட்சிக்கு அடித்தளமாக இருந்தவர் மதிப்பிற்குரிய பாரத ரத்னா சி.சுப்பிரமணியம் அவர்கள்.

அவரது புகழொளியைப் பரப்பிட வேண்டும் என மதிப்பிற்குரிய டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, கோவை மாநகரின் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உள்ள உயர்மட்ட மேம்பாலத்திற்கு ‘சி.சுப்பிரமணியம் மேம்பாலம்’ என்று பெயர்சூட்டும் மகிழ்ச்சிகரமான அறிவிப்பை உங்கள் எல்லோருடனும் பகிர்ந்துகொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### 100 நாள் வேலை திட்டப் பிரச்சினை:

# ஒன்றிய அரசுக்கு எதிராகப் போராட்டம்!

## அகில இந்திய காங்கிரஸ் கட்சி அறிவிப்பு!

*டெல்லி, டிச. 30 -*

*காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு (100 நாள் வேலை திட்டம்) பதிலாக விபிஜி ராம் ஜி என்ற திட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது.*

*இந்த நடவடிக்கைக்கு ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.*

*குறிப்பாக, இந்த திட்டத்தில் மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டுள்ளதையும், திட்டத்தில் மாநில அரசின் நிதிச் சுமை பல மடங்கு அதிகரிக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் காங்கிரஸ் குற்றஞ்சாட்டி வருகிறது.*

*இந்நிலையில், 100 நாள் வேலை திட்ட பிரச்சினையில் ஒன்றிய அரசுக்கு எதிராக வரும் ஜன.5ம் தேதி நாடு தழுவிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.*

*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் பெயரை மாற்றி விபிஜி ராம் ஜி என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது தொடர்பாக ஒன்றிய அரசைக் கண்டித்து காங்கிரஸ் இந்த போராட்டத்தை நடத்த உள்ளது.*

---

### 81 நாடுகளில் இருந்து 24,600 இந்தியர்கள் வெளியேற்றம்!

புதுடெல்லி, டிச. 30 –

வெளிநாடுகளில் விசா விதி மீறல் மற்றும் சட்டவிரோத குடியேற்றம் காரணமாக இந்தியர்கள் தொடர்ந்து திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்த ஆண்டு மட்டும் உலகம் முழுவதும் 81 நாடுகளில் இருந்து மொத்தம் 24,600 இந்தியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். சவுதி அரேபியா அந்தப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சவுதி அரேபியாவிலிருந்து மட்டும் கடந்த ஓராண்டில் 11,000க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

இதற்கு அடுத்தபடியாக அமெரிக்காவிலிருந்து 3,800 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். மியான்மரிலிருந்து 1,591 பேரும், மலேசியாவிலிருந்து 1,485 பேரும், ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து 1,469 பேரும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். பிரிட்டனில் இருந்து 170 மாணவர்கள் வெளியேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

---

### ஊழல் புகார் அதிகாரிக்கு

# பிரதமர் அலுவலகத்தில் உயர் பதவி!

*புதுடெல்லி, டிச. 30 -*

*ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பிரசார் பாரதியின் தலைவராக இருந்த நவ்னீத் குமார் கேசல், கடந்த 2ம் தேதி ராஜினாமா செய்தார். இவருக்கு பிரதமர் அலுவலகத்தில் முக்கிய பொறுப்பு வழங்கப்பட இருப்பதாக கூறப்படுகிறது.*

*இந்நிலையில் காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் பவன் கேரா விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: -*

*உத்தரப்பிரதேச அரசு திட்டத்தில் கடந்த 2019-20 முதல் 2021-22ம் நிதியாண்டு வரையிலும் ரூ.112 கோடிக்கு முறைகேடு நடந்திருப்பதாகவும் அதில் பிரசார் பாரதி முன்னாள் தலைவர் நவ்னீத் பெரும் பங்கு லாபம் அடைந்திருப்பதாகவும் வருமான வரித்துறை 254 பக்க ரகசிய அறிக்கை தயாரித்தது.*

*அந்த அறிக்கை தொடர்பாக நவ்னீத் விளக்கத்தை தொடர்ந்து அவர் விடுவிக்கப்பட்டு பிரசார் பாரதி தலைவராக நியமிக்கப்பட்டார்.*

*இப்போது நவ்னீத், பிரதமர் மோடி அலுவலகத்தின் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட இருப்பதாக கூறப்படுகிறது. இப்பதவியில் தற்போதுள்ள ஹிரேன் ஜோஷி சூதாட்ட செயலி ஊழல் விவகாரத்தில் சம்மந்தப்பட்டிருப்பதாக எழுந்த குற்றச்சாட்டை தொடர்ந்து மாற்றப்பட இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளன.*

*பிரதமர் அலுவலகத்தில் ஒரு ஊழல் அதிகாரிக்கு பதிலாக இன்னொரு கறை படிந்த அதிகாரியை மாற்றுவது ஏன்? இது தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகாதா? இது குறித்து பிரதமர் மோடி மவுனம் காப்பது ஏன்?*

*இவ்வாறு அவர் கூறியுள்ளார்.*